# சாதனைகள் தொலைவில் அல்ல

## ஒலிம்பிக் பதக்க குறிக்கோளுடன் ஓடும் நெல்லை கல்லூரி மாணவி

விடா முயற்சி விஸ்வரூப வெற்றி என்பதை நிரூபிக்கும் வகையில் ஒலிம்பிக் பதக்க குறிக்கோளுடன் ஓடி பதக்கங்களை குவிக்கிறார் நெல்லை கல்லூரி மாணவி ராமலட்சுமி(20). நாரணம்மாள்புரத்தை சேர்ந்த இவர், பாளை. சதக்கத்துல்லா கல்லூரியில் பிஏ 3ம் ஆண்டு படித்து வருகிறார். குழந்தை பருவத்திலேயே ஓடி விளையாடுவதில் ஆர்வமுடைய ராமலட்சுமி, 6ம் வகுப்பு முதல் முறையாக ஓட்டப்ப யிற்சி மேற்கொண்டு வருகிறார்.

இவரது ஆர்வத்திற்கு பெற்றோர் அளித்த ஊக்கம், இதே ஊரை சேர்ந்த அத்லெடிக் பயிற்சியாளர் சுந்தரமூர்த்தியின் பயிற்சி ஆகியவை பதக்க கனவை அதிகரித்தது. பயிற்சி துவங்கிய 6வது மாதத்தில் இவர் பங்கேற்ற முதல் வேல்டுபிட்டர் என்ற பள்ளி மாணவர்களுக்கான தடகளப் போட்டியில் 100 மற்றும் 200 மீட்டர் ஓட்டங்களில் முதலிடம் வந்து தங்கப்பதகங்களை வென்றார். முதல் முயற்சியே தங்கம் கிடைத்தது, அடுத்த முயற்சிக்கு படிக்கல்லாக அமைந்தது. தொடர்ந்து மாவட்ட போட்டிகளில் பரிசுகளை குவித்த இவர், 9ம் வகுப்பு பயிலும் போது கோவாவில் நடந்த தடகளப் போட்டியில் 100 மற்றும் 200 மீட்டர் ஓட்டத்தில் மீண்டும் தங்கப்பதக்கம் வென்றார்.



தொடர்ந்து ராஞ்சியில் நடைபெற்ற தேசிய தடகளத்தில் தமிழகம் சார்பில் பங்கேற்று 100 மீட்டர் ஓட்டத்தில் வெள்ளி பதக்கம் வென்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்தார். லக்னோ, பெங்களூரு, திருவனந்தபுரம் என பல நகரங்களில் நடந்த தென்மண்டல, தேசிய போட்டிகளிலும் பங்கெடுத்தார். முத்தாய்ப்பான சாதனையாக 2015ம் ஆண்டு சீனாவில் உலக அளவிலான பள்ளிகளுக்கு இடையே நடந்த தடகளப்போட்டியில் 200 மீட்டர் ஓட்டத்தில் 3வது இடம் வந்து தமிழகம் மட்டுமின்றி இந்தியாவுக்கே. பெருமை சேர்த்தார்.

தற்போதும் காலையிலும், மாலையிலும் 4 மணி நேரத்திற்கும் மேலாக அண்ணா விளையாட்டு அரங்கு மற்றும் சொந்த கிராமத்தில் பயிற்சி எடுக்கிறார். 400 மீட்டர் தடைதாண்டி ஓடும் பயிற்சியையும் மேற்கொண்டு வருகிறார். ஆசிய மற்றும் ஒலிம்பிக் போட்டிகளில் 400 மீட்டர் தடைதாண்டி ஓடும் போட்டிகளில் இந்தியாவிற்காக பதக்கம் பெறுவதே எனது லட்சியம் என்கிறார் ராமலட்சுமி. இதற்காக பயிற்சியாளர் சுந்தரமூர்த்தி மூலம் கடின பயிற்சியும் மேற்கொள்கிறேன். எனது விளையாட்டு ஆர்வத்தை தொடர்ந்து என் ஊரை சேர்ந்த சுமார் 30 மாணவ மாணவிகள் பல்வேறு தடகளப் பயிற்சி மேற்கொண்டு சாதனைகள் படைத்து வருகின்றனர். குடும்ப சூழல், வறுமை போன்ற தடைகளை கடந்து லட்சியத்துடன் பயிற்சி மேற்கொண்டால் எளிதிலும் வெல்லலாம் என்றபடியே ஓட்ட பயிற்சியை தொடர்ந்தார் அவர்.